உ

சிவகுருமயம்.



தென்றிருப்பதி என்னும் அரியக்குடி ஸ்ரீநிவாசன் வர்க்க வெண்பா

இஃது

காரைக்குடி வித்வான்

அரு. சிவ. ராம. நா. கோவிந்தன் செட்டியாரவர்கள்

இயற்றியதை

காரைக்குடி

திரு. சிவ. அ. சிவராமன் செட்டியாரவர்களால்

...ற்றது.

உ

சிவமயம்



தென்திருப்பதி என்னும் அரியக்குடி

ஸ்ரீ நி வா ச ன்

வர்க்க வேண்பா

இஃது

காரைக்குடி வித்வான்

அரு. சிவ. ராம. நா. கோவிந்தன் செட்டியாரவர்கள்

இயற்றியதை

கா ரை க் கு டி

திரு. சிவ. அ. சிவராமன் செட்டியாரவர்களால்

வெளியிடப்பெற்றது.

1942

சிவகுகமயம்.

சாற்றுக்கவிகள்.

வேம்பத்தூர் பிரமஸ்ரீ சிலேடைப்புலி ஸ்ரீ பிச்சுவையர் அவர்கள் புத்திரர் நடேச பாரதியார் பாடிய

வெண்பா.

ஆரணங்க ளேற்றும் அரியக் குடிநகர்வாழ்
தாரணியுஞ் சீனிவா சன்பேரில் — பூரணமாப்
போற்றிக்கண் வேண்டிப் பொருடெரிய வர்க்கவெண்பாச்
சாற்றினன்வித் வான்கோவிந் தன்.

பண்டித சு. சிதம்பரையரவர்கள் மாணாக்கர் காரைக்குடி சி. முரு. நாராயணன் செட்டியாரவர்கள் இயற்றிய

வெண்பா

கண்ணன் கழலிணையைக் காண்பதற்குக் காதலொடு
பண்ணுபுக ழும்வருக்கப் பாமாலை — எண்ணியே
செல்வமிகு கோவிந்தச் செம்மல்புகன் றானழகாக்
கல்வித் திறமையொழுக் கம்.

ஸ்ரீவில்லிபுத்தூர் மாநகரைச் சார்ந்த பெருமாள்மாநகரம் திரு. திருமலைச்சாமிக் கவிராயரவர்க ளியற்றிய

ஆசிரிய விருத்தம்

மிக்கபுகழ் பெற்றவரி யக்குடியில் வாழுதிரு வேங்க டன்மேற்
றங்குபுகழ் சாரைநகர் மாவணிக நாரணவேள் தந்த மைந்தன்
பக்குவம தாகவர்க்க வெண்பாவாக் கோவிந்தன் பாரின்கண்ணே
சக்கரைநற் பந்தர்தனிற் றேன்மாரி பெய்ததெனச் சாற்றி னானே.

காரைக்குடி ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரேசுவர வித்தியாசாலைத்
தலைமைத் தமிழாசிரியர் பா. மாசிலாமணித்
தேசிகரவர்கள் சாற்றிய

நேரிசை வெண்பா

உலகெலா மீந்தானை யோங்குறு காலை
உலகளிசெய் தோங்கினனை மாலைப் — பலகால்
அருசிவ ராமனா ஆர்கோவிந் தன்சீர்
பரவுவான் வெண்பாப் பகர்ந்து.

பதின்சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

உலகுயர்தென் திருப்பதியென் றுயரரியக் குடிவேங்க
டத்தான் றன்மீ தரைவருக்கக் கலிவெண்பா வுவந்தன் பாலே
அலகில்புகழ் பெறுதமிழர் பெருகுதிரு வுயர்காரை
யம்ப திக்க ணணிவணிக திருநாரா யணவேள் தந்த
புலவர்தெளி பலபொருள்சொல் கவிபகருந் திருவாளன்
கோவிந் தன்றேர் புலமைவரு துதிமாலை புலவர் கொள்ள
நிலவலரி உயிரவனி கடவுண்மறை யடியார்கள்
வாழு நாளும் நிலவியுறும் புவியின்கண் நெடிது வாழி.

அவையடக்கம்

கட்டளைக் கலித்துறை

அவையடக் கம்யான் புகலுவஞ் கல்வி யறிந்திலனூ
லெவைகளுந் தேர்ந்திலன் பள்ளிப் படிப்பே யெனக்குளதால்
சுவைபெருஞ் சொற்களை யன்றிக் குளறினுந் தொல்லுலகோ
ரவைகளை மன்னித் தருள்செய வேண்டுவ னன்புடனே.

ஸ்ரீராமஜயம்.



காப்பு

தேங்கு புகழ்த்தென் றிருப்பதியின் மேவுதிரு
வேங்கடத்தான் மீதுவர்க்க வெண்பாயான் — பாங்குடனே
செப்பமுன் வந்தருளுஞ் சீரானை மாவதனத்
தப்பனின் ருள்காப்ப தாம்.

வர்க்க வெண்பா

அமரர்க் கனுகூலர் அந்தமதிற் றுட்ட
எமன்வா தனையன்றி எம்மைத் — தமதடிக்கே
வந்துய்யும் வண்ணம் வடமலையா யெங்களுக்குத்
தந்தருள்வாய் வாக்குநன்கு தான். (1)

ஆதி வடக்குமலை ஆர்தெந் திருப்பதிநற்
சோதிசீ ரங்கமுயர் சோலைமலை — மீதிலுறை
மாவழகா நாங்களெல்லாம் வம்மிசப ரம்பரையாச்
சேவடிபூ சிக்கவருள் செய். (2)

இப்பாரிற் றெய்வங்க ளொத்தனையுந் தாமுனக்கு
ஒப்பாமோ சொல்வாய் உலகளந்தோய் — செப்பரிய
செல்வத் துடன்மக்கள் சேர்த்திருந்து பாரின்க
ணல்வாக்குத் தாநாரா ணா. (3)

ஈரமிலா நெஞ்சோ டிருந்ததுரி யோதனனின்
பாரதப்போ ரிற்பஞ்ச பாண்டவரைத் — தாரணியி
லாதரவாய்க் காத்ததுபோ லன்புவைத் தெங்களையு
மாதரவோ டாளின்ப மா. (4)

உள்ளன் புடன்பணிந்தோர்க் கோர்நாளு மெக்குறையு
மெள்ளளவும் வாரா திருக்கவருள் — பிள்ளைகள்யாம்
முற்காலம் போன்றே முழுதுமுனை நம்பியுள்ளோம்
வற்றாச்செல் வந்தந்தாள் வாய். (5)

ஊக்க முடனிலங்கை யூராளு மோராக்கன்
ஆக்கை யழித்தே யமரர்களைக் — காக்கலுற்ற
சீதா மகிழ்ராமா சீனுவா னுமேனு
மேதாவி யாகவேண்டு மே. (6)

எண்ணரிய கண்ணபிரா னெந்நாளு மெங்களுக்குன்
கண்ணுனை செந்திருவைக் கண்பார்க்கும் — வண்ணமுறை
சின்னஞ் சிறியோர் தெரியாது செய்பிழைகள்
மன்னித் தருளுதிரு மால். (7)

ஏறும் பரிகருட னென்றுமுன் பாலிருக்க
வாறுதலைச் சொல்லுதற்கு னன்பருக்கா—யேறியிங்குச்
சேருதற்கே யென்னதடை செங்கமல மங்கைபங்கா
காரணத்தைச் சொல்வாய் கனிந்து. (8)

ஐந்தெழுத்து மந்திரத்தை யன்புடனே ஓதுதலால்
மைந்தரைக்கண் பார்க்க மனமிலையோ — சந்ததமும்
அல்லும் பகலு மனுதினமு முன்னுமம்
சொல்லா திருப்பதுண்டோ சொல். (9)

ஒற்றுமையாய் முன்னோர்கள் உன்னைப் பணிந்தபடி
பற்றுதலோ டேபணிந்தோம் பாரின்கண் — வெற்றியருள்
தாசர்கட்குத் தாசர்களாய்த் தாள்பணிந்தோ மேசீநி
வாசா கிருபைசெய்கு வாய். (10)

ஓரடியாய்ப் பூமி யுவந்தளந்தா யெங்களுக்குத்
தாரணியிற் சந்ததிகள் தந்தருள்வாய் — நாரணனே
ஊமை செவிடுகுரு டொச்சமா காதெங்கள்
நாமம் விளங்கவரு ணன்கு. (11)

ஔவை யகத்தியன்போன் றுய்த்தமிழைக் கற்றுணர்ந்து
கவ்வைதனி லீடபடாக் காளைபெண்கள் — செவ்வெனவே
தந்தருள வேண்டுமென்றே தாள்பணிந்தோ மெங்கள்குலச்
செந்தா மரைக்கண்ணா செய். (12)

கண்ணன் கமலனென்றுங் காளிங்க நர்த்தனென்றும்
மண்ணையுண்ட வாயன் வரதனென்றும் — எண்ணரிய
நாமம் புனைந்த நரசிம்மா வெங்களுக்குத்
தாமதமில் லாதருள்நீ தா. (13)

சத்துருக்க னென்பார் சாணு கதியடைய
வைத்தருள லுன்கடமை மாலழகா — எத்தினமும்
பக்கத்தி லேயிருக்கப் பாரா திருப்பதெனை
மிக்கவழ காமோ விது. (14)

தருமந் தழைத்தோங்கத் தாரணிமீ தன்பாய்
விரும்பியன்ன தானம் விளங்க — அருள்சொரியுங்
காவலனென் றேமால் கவியுரைத்தேன் நான்முகனின்
றேவியருள் பொங்கிவரச் செய். (15)

பண்டரிநா தாவுன்பேர் பாலகன்யான் பெற்றிதுநாள்
தெண்டனிட்டு வந்ததற்கி தேபலனு—முண்டகத்தின்
மீதிலுறை யன்னையுடன் வீமீதுற் றென்றனக்கு
சாதிப்பாய் காட்சிதனைத் தான். (16)

ஸ்ரீராமஜயம்.



காரைக்குடி ஸ்ரீ வேணுகோபாலன் பஞ்சரத்தினம்.

காப்பு

சீராருங் கண்பார்வை சீக்கிரம்யான் பெற்றேங்கப்
பாராரும் வேணுகோ பாலன்மே — லோரும்
நற்பஞ்ச ரத்தினம்யான் நானிலத்திற் செப்புதற்குக்
கற்பகவி நாயகனே காப்பு.

நேரிசை வெண்பா

நத்திவரு வோர்க்குமுத்தி நன்றளிக்கும் ருக்குமணி
சத்தியபா மாவிருவர் தாமகிழும் — உத்தமனே
கோதண்ட பாணியே கும்பிட்டேன் கண்தருவாய்
சோதனைநீ தான்செய்வ தோ. (1)

அரியக் குடிகாரை யம்பதியி லும்மைப்
பிரதிட்டை செய்துள்ளார் பெட்பெம் — பெரியோர்கள்
அவ்வா றிருக்க வழகாமோ என்கண்ணை
இவ்வாறு நீவைத்த தேன். (2)

கண்ண னெனப்பேர் கருணையுடன் கொண்டுமென்றன்
கண்ணைத் திறக்காத காரணமேன் — மண்ணையுண்ட
செந்திருமால் கேலிமற்றோர் செய்யாது தோன்றவருள்
வந்தித்தேன் வாக்கருளு வாய். (3)

தெய்வத்தா லாகாத தெங்குமுண்டோ மாலழகா
மெய்யாகக் கண்தருவாய் மேதினியிற் — பொய்யாகாப்
பாட்டுப் படித்தான் பலன்கண்டா னென்றிந்நா
ணாட்டினிலே கீர்த்திநார ணா. (4)

கண்தந்தான் செல்வக் கடல்தந்தான் கல்வியெனும்
பண்தந்தா னென்றனக்குப் பாலர்பல — கண்தந்தான்
துத்தியமா யென்றுசொல்லித் தோத்திரித்தே யுன்பதநா
ளித்திரையி லும்மறவே னே. (5)

வாழி

ஐங்கரன்வேல் வாழி அரனுமையாள் வாழிவெற்றிச்
சங்குடையோன் செங்கமலத் தாய்வாழி — பங்கயனற்
பாவழகி வாழிதநர்ப் பாணிவேணு கோபாலன்
மாவுலகோர் வர்க்கவெண்பா வாழி.

சம்பூ